மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்

**இரண்டாம் தவணைப் பரீட்சை -2023**

வரலாறு

| | | |
|---|---|---|
| தரம் - **9** | | இரண்டு மணித்தியாலம் |

## பகுதி - I

❖ **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

1. குண்டசாலை இளவரசன் என அழைக்கப்பட்ட மன்னன் யார்?
   (1) இரண்டாம் விமலதர்ம சூரியன்
   (2) இரண்டாம் இராஜசிங்கன்
   (3) வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்
   (4) செனரத்

2. ஒல்லாந்தர் சமயத்தைப் பரப்புவதற்கு அமைத்த விசேட நிறுவனம் எது?
   (1) குவிதான்சி (2) வெந்தேசி (3) தேவாலகம் (4) இஸ்கோல்

3. ஆளுநர் பிரட்றிக் நோர்த்தின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் இலங்கைக்கு நியமிக்கப்பட்ட பிரித்தானிய ஆளுநரின் பெயர் என்ன?
   (1) ஜோன் பைபஸ் (2) ஹியுபொயிட்
   (3) தோமஸ் மெயிட்லன்ட் (4) றொபட் அன்ட்றூஸ்

4. 1818 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டம் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட இடம்
   (1) மாத்தளை (2) கண்டி (3) வெல்லச (4) பலன

5. கி. பி. 1796 ஆம் ஆண்டு பிரித்தானியர் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றிய போது கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்த நாயக்க வம்ச அரசனின் பெயர் என்ன?
   (1) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
   (2) இராதிஇராஜசிங்கன்
   (3) ஸ்ரீ விஜய இராஜசிங்கன்
   (4) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

6. கி. பி. 1797 இல் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிக்கான காரணங்களை ஆராய்வதற்கு அமைக்கப்பட்ட குழுவின் பெயர் என்ன?
   (1) மியுரன் ஆணைக்குழு
   (2) கமரன் ஆணைக்குழு
   (3) கோல்புறூக் ஆணைக்குழு
   (4) மனிங் ஆணைக்குழு

7. இலங்கையில் பிரம்மஞான சங்கம் அமைப்பதற்கு ஒத்தழைப்பு வழங்கிய தேரர்
   (1) மீக்கெட்டுவத்த குணானந்த தேரர்
   (2) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்
   (3) பொத்துவில் இந்திரஜோதி தேரர்
   (4) வஸ்கடுவ சுபதி தேரர்

8. வெசாக் தினத்தினை விடுமுறை தினமாக பிரகடனப்படுத்த முயற்சி மேற்கொண்டவரின் பெயர் என்ன?

(1) அநாகரிக தர்மபால (2) பியதாஸ சிறிசேன

(3) ஹென்றி ஸ்ரீவ் ஒல்கொட் (4) ஆதர் வீதியஸ்

9. யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வராக் கல்லூரியை நிறுவியவரின் பெயர் என்ன?

(1) சேர் பொன் இராமநாதன்

(2) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

(3) சேர் பொன் அருணாச்சலம்

(4) குமாரசுவாமிப் புலவர்

10. முஸ்லிம் நேசன் பத்திரிகை வெளிவரக் காரணமானவர்

(1) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

(2) டி. பி. ஜாயா

(3) சேர் பொன் இராமநாதன்

(4) எம். சி. சித்திலெப்பை

11. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் வடபகுதியை மையமாகக் கொண்டு செயற்பட்ட மிசனரி

(1) லண்டன் மிசனரி (2) அமெரிக்கன் மிசனரி

(3) சேர்ச் மிசனரி (4) வெஸ்லியன் மிசனரி

12. போர்த்துக்கேயரின் கீழைத்தேச வர்த்தக மையம் அமைந்திருந்த இடம்

(1) மும்பை (2) பத்தேவியா (3) காரைக்கால் (4) கோவா

13. இந்திய முஸ்லிம் சங்கத்தின் முதலாவது தலைவர் யார்?

(1) மங்கல் பாண்டே (2) தாதாபாய் நவ்ரோஜி

(3) மௌலானா அப்துல் கலாம் அசாத் (4) முகமது அலி ஜின்னா

14. சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதமரின் பெயர் யாது?

(1) இந்திராகாந்தி (2) ஜவகர்லால் நேரு

(3) மோதிலால் நேரு (4) நரேந்திர மோடி

- **15 தொடக்கம் 17 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்டுள்ள ‘அ’ மற்றும் ‘ஆ’ ஆகிய இரு நிரல்களைத் தொடர்புபடுத்தி சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.**

15.

| **நிரல் ‘அ’** | **நிரல் ‘ஆ’** |
|---|---|
| 1. 1 ஆம் விமலதர்ம சூரியன் | A - ஜெனரல் ஜெராட்கல்ப்ஸ் |
| 2. 2 ஆம் இராஜசிங்கன் | B - கொர்னேலியல்டெகர் |
| 3. 2 ஆம் விமலதர்ம சூரியன் | C - ஜோரிஸ்வாஸ் ஸ்பில்பேர்கன் |
| 4. ஸ்ரீ வீரபராக்கிம நரேந்திரசிங்கன் | D - கலன் அல்பஸ் |

(1) BCDA (2) CADB (3) DABC (4) ACDB

16. நிரல் 'அ' | நிரல் 'ஆ'

| நிரல் 'அ' | நிரல் 'ஆ' |
|---|---|
| 1. கோப்பி | A - குருநாகல் |
| 2. தேயிலை | B - கம்பளை |
| 3. தென்னை | C - பேராதனை |
| 4. இறப்பர் | D - லூல்கந்தூர |

(1) ACBD (2) CDAB (3) DACB (4) BDAC

17.

| நிரல் 'அ' | நிரல் 'ஆ' |
|---|---|
| 1. லண்டன் மிஷனரி | A - யாழ்ப்பாணம் |
| 2. பெப்டிஸ் மிஷனரி | B - கரையோரப் பிரதேசம் |
| 3. சேர்ச் மிஷனரி | C - கொழும்பு |
| 4. அமெரிக்கன் மிஷனரி | D - காலி |

(1) BCDA (2) ACDB (3) DCAB (4) CDAB

18. இலங்கையில் நடைபெற்ற ஐம்பெரும் விவாதங்களில் மிகவும் பிரசித்தி பெற்ற விவாதம் நடைபெற்ற இடம் எது?

(1) பாணாந்துறை (2) பத்தேகம (3) கம்பளை (4) வராகொட

19. 1818 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய போராட்டத் தலைவரின் பெயர் யாது?

(1) மடுகல்லே
(2) பிலிமத்தலாவை
(3) கெப்பட்டிபொல திசாவை
(4) பூட்டாலே ரட்டேரால

20. கி. பி. 1761 இல் இந்தியாவில் பிரான்சியரின் ஆட்சி முடிவுக்கு வருவதற்குக் காரணமாக அமைந்த விடயம் யாது?

(1) காரைக்கால் பிரதேசத்தைப் பிரித்தானியர் கைப்பற்றியமை
(2) பாண்டிச்சேரி பிரதேசத்தைப் பிரித்தானியர் கைப்பற்றியமை
(3) சந்திரநாகூர் பிரதேசத்தைப் பிரித்தானியர் கைப்பற்றியமை
(4) கோவா பிரதேசத்தை ஒல்லாந்தர் கைப்பற்றியமை


($20 \times 2 = 40$ புள்ளிகள்)

## பகுதி - II

**அறிவுறுத்தல் :**

- **பகுதிII இல் முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினாவிற்கும் வேறு நான்கு வினாகட்களுக்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

*1.* (i) தொடக்கம் (vi) வரை தரப்பட்டுள்ள கூற்றக்களுக்குப் பொருத்தமான இடங்கள் இலங்கைப் படத்தில் A - G வரை குறித்துக் காட்டப்பட்டுள்ளது. அக்கூற்றக்களுக்குப் பொருத்தமான எழுத்துக்களையும் அந்த எழுத்துக்கள் குறிக்கும் இடங்களின் பெயர்களையும் விடைத்தாளில் எழுதுக.



(i) போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து வெளியேற்றிய இரண்டாம் இராஜசிங்க மன்னனின் ஆட்சி மையத்தைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்.

(ii) *1638* இல் இரண்டாம் இராஜசிங்க மன்னனின் படையும் ஒல்லாந்தருடைய படையும் இணைந்து தாக்கிய போர்த்துக்கேயருடைய கோட்டை அமைந்திருந்த இடத்தைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்.

(iii) இலங்கையில் வங்காள விரிகுடாவையும் தென்கிழக்கு ஆசியாவையும் நோக்கி அமைந்திருந்த இயற்கை துறைமுகத்தினைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்.

(iv) ஆளுநர் ஆதர் கோடன் நீர்ப்பாசன அமைப்புக்களைப் புனரமைப்புச் செய்த நதியைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்

(v) ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் வடக்கே புத்தளத்திலிருந்து கிழக்கே மட்டக்களப்பு வரை ஆட்சிக்குட்பட்டிருந்த கொமாண்டரியும் அதன் பெயரும்.

(vi) ஆளுநர் வில்லியம் கிரகெரியால் புனரமைப்பு செய்யப்பட்ட பசவக் குளம், திசாவாவி அமைந்துள்ள பிரதேசமும் அதன் பெயரும். $(06 \times 2 = 12$ புள்ளிகள்)

*2.* (i) இரண்டாம் இராசிங்க மன்னன் ஜெனரல் ஜெராட் ஹல்ப்பின் தூதுப் பயணத்தின் போது அவருக்கு வழங்கிய பரிசுப் பொருட்கள் மூன்றினைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(ii) ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் கரையோரப் பகுதியில் அறிமுகப்படுத்திய நீதிமன்றங்கள் நான்கினைத் தருக. *(04 புள்ளிகள்)*

(iii) ஒல்லாந்தர் இலங்கையில் மேலதிக இலாபத்தினை பெறுவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் ஐந்தினைக் குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

*3.* (i) கண்டி இராச்சியத்தை பிரித்தானியர் கைப்பற்ற வேண்டும் எனக் கருதியமைக்கான மூன்று காரணங்களைத் தருக. *(03 புள்ளிகள்)*

(ii) (a) பிரித்தானியர் இலங்கையில் கவனம் செலுத்தியமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(b) கண்டி இராச்சியத்திற்கு வருகை தந்த பிரித்தானிய தூதுவர்கள் இருவரைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) *1797* ஆம் ஆண்டு கிழக்கிந்திய கம்பனியின் ஆட்சிக்கெதிராகக் கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிக்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. *(05 புள்ளிகள்)*

4. (i) பின்வரும் காலப்பகுதியில் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் நிலவிய பிரித்தானியாவின் ஆட்சி முறைகளைக் பெயரிடுக.

(a) *1796 - 1798* -

(b) *1798 - 1802* -

(c) *1802* - *(03 புள்ளிகள்)*

- கீழே A,B,C,D எனத் தரப்பட்ட கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடைகளை அதே ஒழுங்கில் தருக.

(ii) A - இலங்கையின் முதலாவது பிரித்தானிய ஆளுநர்

B - ஸ்ரீவிக்கிரம இராஜசிங்க மன்னனின் மனைவியின் பெயர்

C - *1803* இல் ஆங்கிலேயரால் கண்டி மன்னனாக பிரகடனப்படுத்தப்பட்ட போலி மன்னன் யார்?

D - கண்டி இராச்சிய பிரித்தானிய உளவாளியாக செயற்பட்ட பிரித்தானிய சிவில் சேவை உத்தியோகத்தரின் பெயர் என்ன? *(04 புள்ளிகள்)*

(iii) *1818* ஆம் ஆண்டு முதலாம் சுதந்திரப் போராட்டத்திற்கான மூன்று காரணங்களைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. *(05 புள்ளிகள்)*

5. (i) இலங்கையின் பெருந்தோட்டப் பயிர்கள் மூன்றினைத் தருக. *(03 புள்ளிகள்)*

- A,B,C,D எனத் தரப்பட்ட கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடைகளை அதே ஒழுங்கில் தருக.

(ii) A - மலேரியா நோய்க்கான குயினைன் மருந்து தயாரிக்கப்பட்ட செடியின் பெயர்

B - இலங்கையில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினை ஆரம்பித்தவர்கள்

C - தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்

D - *1818* ஆம் ஆண்டு போராட்டத்தை அடக்குவதற்காக பிரித்தானியரால் பிரகடனப்படுத்தப்பட்ட சட்டம் *(04 புள்ளிகள்)*

(iii) *1848* ஆம் ஆண்டு இரண்டாவது சுதந்திரப் போராட்டம் தோல்வி அடைந்தமைக்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. *(05 புள்ளிகள்)*

6. (i) பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(ii) ஐம்பெரும் விவாதங்களில் பங்குபற்றிய பௌத்த குருமார்கள் நால்வரின் பெயர்களைத் தருக.

(iii) (a) கீழே A, B, C என சமய மறுமலர்ச்சியில் ஈடுபட்டவர்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவர்கள் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய சமயங்களின் பெயர்களைத் தருக.

A - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

B - ஸ்ரீல் ஒல்கொட்

C - ஓரபிபாஷா *(03 புள்ளிகள்)*

(b) மேலே தரப்பட்டவர்களில் ஒருவரின் சமயப் பணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

- கீழே A,B,C, எனத் தரப்பட்ட கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடைகளை அதே ஒழுங்கில் தருக.

7. (i) A - *1498 ஆம் ஆண்டு இந்தியாவை வந்தடைந்த போர்த்துக்கேய மாலுமி*

B - மொகாலயப் பேரரசின் ஆரம்ப ஆட்சியாளன்

C - *1857 அம் ஆண்டு பிரித்தானியருக்கு எதிராக மேற்கொண்ட பாரிய கிளர்ச்சி*

*(03 புள்ளிகள்)*

(ii) (a) பிரான்சிய கிழக்கிந்தியக் கம்பனி இந்தியாவில் நிறுவிய வியாபார மத்திய நிலையங்கள் இரண்டின் பெயர்களைத் தருக. *(02 புள்ளிகள்)*

(b) இந்தியாவில் இந்து சமய சமூக சீர்திருத்தங்களில் கவனம் செலுத்திய இயக்கங்கள் இரண்டின் பெயர்களைத் தருக. *(02 புள்ளிகள்)*

(iii) (a) மகாத்மாகாந்தி பிரித்தானியருக்க எதிராக மேற்கொண்ட போராட்டங்கள் மூன்றின் பெயர்களைத் தருக. *(03 புள்ளிகள்)*

(b) சிப்பாய்க் கலகத்தின் விளைவுகள் இரண்டு தருக. *(02 புள்ளிகள்)*